எட்டுத்தொகை அக நூல்களில் பெண்ணிய அணுகுமுறைகள்

நெறியாளர் முனைவர் கு.மேனகா
உதவிப் பேராசிரியர், தமிழ் துறை மற்றும் ஆய்வு மையம்
சாராள் தக்கர் கல்லூரி (தன்னாட்சி), திருநெல்வேலி

டோ. ஆரோக்கிய ஜெனிட்டா சயேற்
பதிவெண் - 2422120012001, பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
சாராள் தக்கர் கல்லூரி (தன்னாட்சி), திருநெல்வேலி

முகவுரை

எட்டுத்தொகையில் நற்றிணை குறுந்தொகை ஐங்குறுநூறு கலித்தொகை அகநானூறு ஆகிய ஐந்தும் அக நூல்களாகும். பெண்ணிய அணுகுமுறை என்பது பெண்களின் உணர்வுகள் காதலுரிமை துணிச்சல் மற்றும் சமூகச் சூழலில் அவர்களின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதாக உள்ளது. தலைவியின் ஆளுமை தோழியின் வழிகாட்டுதல் கற்புக்கோட்பாடு மற்றும் காதல் வயப்பட்ட நிலையில் பெண்ணின் மனநிலை ஆகியவை நவீன பெண்ணியக் கண்ணோட்டத்துடன் சங்கப் பாடல்களில் ஆழமாகப் பேசப்படுகின்றன. இவற்றை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் பொருண்மையாகிறது. உலகின் உயர்திணை உயிர்களில் ஆணுக்கு சமமாக விளங்கும் உயிர் பெண் இனம். மக்கள் தொகையில் சரிபாதியாகவோ சற்று கூடியோ விளங்கும் பெண்கள் சமுதாய மதிப்பில் பெறும் இடம் எத்தகையது என்பதை அறிஞர்கள் ஆராய்ந்து வந்துள்ளனர். பெண்களின் அடிமைத்தனம் நல்லதன்று என சான்றோர் பலர் எதிர்த்து வந்துள்ளதை தமிழக வரலாறு காட்டுகிறது. இவ்வகையில் சங்க இலக்கியத்தில் பெண்ணிய அணுகுமுறைகள் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்

திறவுச் சொற்கள்: *சங்கம், பெண்ணியம், ஆளுமை, அன்பு, கடவுள்*

பெண்ணியம் விளக்கம்

Feminism *என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையாக வழங்குவது பெண்ணியம் என்ற சொல்லாகும். சிலர் பெண்ணிலை வாதம் என்றும் சொல்லுவர். பெண்ணின் நிலையில் இருந்து கருத்துக்கள் அல்லது வாதங்கள் எழுவது பெண்ணியவாதம் ஆகும். ஆண்டாண்டு காலமாக உலகின் பல்வேறு பகுதிகளிலும் பெண் அடிமைப்பட்டே இருந்தாள். குடும்ப நிர்வாகம் முதற்கொண்டு பல கடமைகளைச் செய்தாலும் இனவிருத்திசெய்துகுடும்பத்தைப் பெருக்கினாலும் அன்பு பாசம் முதலிய பல நல்ல பண்புகளைப் பெற்றிருந்தாலும் பெண் தொடர்ந்து அடிமையாகவே இருக்கிறாள். இந்தச் சமுதாயம் ஆண்களை மையமிட்டது. எல்லா கருத்துக்களும் செயல்களும் ஆண்களை மையமிட்டே நடக்கின்றன. இத்தகைய சமுதாயச் சூழ்நிலையை மாற்ற வேண்டும். பெண் விடுதலை பெற வேண்டும் என்று பெண்ணியம் கூறுகிறது. ஒவ்வொரு பெண்ணுக்கும் ஆளுமை உண்டு. அந்த ஆளுமை காப்பாற்றப்பட வேண்டும். வார்க்கப்பட வேண்டும். காட்டிக்கொள்ளப்பட வேண்டும் என்று பெண்ணியம் கூறுகிறது.*

நற்றிணையில் பெண்ணியம்

பொதுவாக பெண்கள் தங்கள் காதல் உணர்வுகளை வெளிப்படுத்த மாட்டார்கள் என்ற கருத்து உண்டு . சங்க இலக்கியத்தில் வெள்ளிவீதியார் பாடிய இரண்டு நற்றிணைப் பாடல்களிலும் காம உணர்வை தாங்கிக் கொள்ள முடியவில்லை என்று பெண்கள்

வெளிப்படையாகவே குறிப்பிட்டுள்ளனர்.

"யாமம் உய்யாமை நின்றன்று
காமமோ பெரிதே களைஞரோ இலரே"

(நற்றிணை. 335)

நள்ளிரவில் என் உயிர் நின்றுவிடும் போல உள்ளது. காமநோய் பெரிதாகும். அதை நீக்குவார் யாரும் இல்லை என்கிறார் தலைவி. அவருடைய இன்னொரு பாடல்.

"கனைஇருங் கங்குலும் கண்படை இலனே
அதனால் என்னொடு பொருங்கொல் இவ்வுலகம்
உலகமொடு பொருங்கொல் என் அவலம் உறு நெஞ்சே"

(நற்றிணை 348)

என்ற வரிகள் நள்ளிரவில் தூக்கம் வரவில்லை அதனால் உலகம் என்னோடு சண்டை போடுகிறது. நான் உலகத்தோடு சண்டை போடட்டுமா? என்று தலைவி கேட்பதாக அமைகிறது

கலித்தொகையில் பெண்ணியம்

கலித்தொகையில் பெண்கள் தங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளையும் தலைவனின் தவறான நடத்தைகளையும் துணிச்சலுடன் எதிர்க்கும் காட்சிகள் உள்ளன.குறிப்பாக மருதக் கலி பாடல்களில் தலைவன் பரத்தையிடம் சென்று திரும்புவதைக் கண்ட தலைவி அவனைத் தடுத்து கேள்வி கேட்கும் இடங்கள் பெண்ணிய சிந்தனையின் வெளிப்பாடாக அமைகின்றன.

"நன்றும் தடைஇய மென்தோளாய்! கேட்டீவாயாயின்
உடன் உறை வாழ்க்கைக்கு உதவி உறையும்
கடவுளர் கண் தங்கினேன்
சோலை மலர்வேய்ந்த மான்பிணை அன்னார் பலர் நீ
கடவுண்மை கொண்டு ஒழுகுவார்
அவருள் எக்கடவுள்? மற்ற அக்கடவுளை செப்பீமன்."

(மருதக் கலி 93)

இரவு முழுவதும் பரத்தையர் வீட்டில் தங்கி காலையில் வீடு சென்ற தலைவனை நோக்கி கேள்வி கேட்ட தலைவியிடம் தலைவன் பெரிதும் பெருத்த மென்மையான தோளாய் யான்கூறுகின்றதனைக் கேட்பாயாயிற் கேள்: நாம் இருவரும் உடன் இருந்து வாழும் வாழ்க்கைக்கு உதவியாக இருக்கும் கடவுளரைக் கண்டு அவரிடத்தே தங்கினேன் என்றான். அது கேட்ட தலைவி கடவுள் தன்மையை உண்மையாகக் கொண்டு நடத்துவார்: சோலையில் மலரைச் சூடின மான்பிணை போலும் நோக்கினை உடைய பரத்தையர் பலர் உளர்: அப்பரத்தையருள் நீ கண்டு வந்த கடவுள் எந்தக் கடவுள்? அக்கடவுளைச் சொல்லுவாய் என்று கூறினாள்.

பெண் அடிமைத்தனம்

சங்கப் பாடல்களில் பல இடங்களில் பெண் அடிமைத்தனம் ஆழமாக பதிவாகியுள்ளது. எடுத்துக்காட்டாக மன்னன் பூதப்பாண்டியன் இறந்து விட்டான் அவனுடைய மனைவி பெருங்கோப்பெண்டுஈமகாட்டிலேநிற்கிறாள் எதிரே ஈமத்தீ கொழுந்து விட்டு எரிகிறது. தீயிலே குதிக்க தயாரான நிலையில் இருக்கிறாள். சுற்றிவர நிற்கிற சான்றோர் கூட்டம் அனுதாபத்தோடு வேண்டாம் என தடுக்கிறது. அவர்களிடம்

"பல்சான்றீரே பல்சான்றீரே!
செல்கெனச் சொல்லாது ஒழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சி பல்சான்றீரே!

(புறம் 246)

என சொல்லுகின்றாள்.அவளுடைய கூற்றாக அமைந்த இப்பாடல் அவளுக்கு கணவன் மேல் பெரும் காதல் இருந்ததாகவும்அவன் இறந்த உடன் தானும் அதே தீயில் விழுந்து சாக நினைப்பது அவளுடைய மனதிண்மையையும் கற்பையும் காட்டுவதாகவும் வழி வழியாகச் சொல்லப்பட்டு வருகிறது.

ஐங்குறுநூறில் பெண்ணியம்

தலைவன் பிரிந்து செல்லும்போது, வழியில் ஏற்படும் துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளத் தயாராக இருக்கும் மனப்பக்குவம் மற்றும் துணிச்சல் ஐங்குறுநூறு மருதத் திணை பாடல்களில் வெளிப்படுகிறது.

தலைவனின் பிரிவால் ஏற்படும் துயரத்தை விட, தன் காதலைப் பகிர்ந்து கொள்ளும் இன்பமே சிறந்தது என தலைவி கருதுகிறாள்.

"*பரியுடை நல்மான் பொங்குஉளை அன்ன,*
அடைகரை வேழம் வெண்பூப் பகரும்,
தண்துறை ஊரன் பெண்டிர்,
துஞ்சுஊர் யாமத்தும், துயில்அறி யலரே"

(மருதத்திணை 13)

என்ற வரிகளில் தலைவனின் பிரிவால் உறக்கம் இழக்கும் தலைவியின் நிலை காணப்படுகிறது.

குறுந்தொகையில் பெண்ணிய அணுகுமுறைகள்

குறுந்தொகைப் பாடல்களில் பெண்கள் பெரும்பாலும் வெறும் பொருள்களாகச் சித்தரிக்கப்படாமல் தங்கள் உணர்வுகளைத் தெளிவாகப் பேசும் சமூக மாந்தர்களாக இருப்பதே இதில் உள்ள பெண்ணியச் சிறப்பம்சமாகும்.

"*யாயும் ஞாயும் யார்ஆ கியரோ ?*
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயல் நீர் போல,
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"

(குறுந். 40)

காதலன் யார் என்றே தெரியாத நிலையிலும் தன் மனதிற்கு பிடித்தவருடன் இரண்டறக் கலக்கும் பெண்ணின் உணர்வு சுதந்திரத்தை இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

"*அம்ம வாழி தோழி*"

இப்பாடலில் தலைவி, தலைவன் தன்னை திருமணம் செய்ய வேண்டும் என்ற தனது விருப்பத்தைத் தோழியின் மூலம் துணிச்சலாக தெரியப்படுத்துகிறாள். இது அக்கால பெண்ணின் தன்னுரிமையை வெளிப்படுத்துகிறது.

நிறைவுரை

மேற்காண் தரவுகளின் மூலம் சங்க காலப் பெண்கள் அடிமைகளாக இல்லாமல் சமூகம் மற்றும் காதல் வாழ்வில் உரிமை உடையவர்களாகவும், ஆளுமை மிக்கவர்களாகவும் இருந்தனர் என்பதை அறிய முடிகிறது.

துணை நூல் பட்டியல்

1. *தி.சு .நடராசன் - திருனாய்வுக் கலை , நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிட், சென்னை*
2. *அறிஞர். ச.வே. சுப்பிரமணியன் - சங்க இலக்கியம், எட்டுத்தொகை, மூலமும் தெளிவுரையும், தொகுதி - 1, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.*
3. *முனைவர். அ. விசுவநாதன் - சங்க இலக்கியம், கலித்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.*